| Spl S.CNo. | 17/2022 (CC No.3/2018) | Deposition of | PW. 40 (LW 213) |
|---|---|---|---|
| Name | Thiru. Palani | Date | 27.01.2026 |

**1 முதல் 5 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள்.**

**குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 12.00 P.M**

நோடல் ஆபிசர் பணி என்பது டெலிகாம் சர்வீஸ் மற்றும் வாடிக்கையாளருக்கும் இணைப்பு பாலமாக இருப்பது என்றால் சரிதான். TRAI ல் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் அடிப்படையில் தான் நோடல் ஆபிசர் பணியமர்த்தப்படுவார் என்றால் சரியல்ல. DoT (Department of Telecommunication) ல் வழங்கியுள்ள வழிகாட்டுதலின் அடிப்படையில் தான் நோடல் ஆபிசர் பணியமர்த்தப்படுவார். TRAI and DoT வெவ்வேறு அமைப்புகளாகும். DoTன் படி நோடல் ஆபிசர் பணி அமர்த்தப்படும் போது முன்னணி பிராந்திய மொழி நாளிதழிலும் ஆங்கில மொழி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. ஒவ்வொரு வருடமும் DoTன் படி நோடல் ஆபிசர் பணி அமர்த்தப்படும் போது முன்னணி பிராந்திய மொழி நாளிதழிலும் ஆங்கில மொழி நாளிதழிலும் விளம்பரம் செய்யப்பட வேண்டும் என்று நன்கு தெரிந்திருந்தும் நான் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் நோடல் ஆபிசர் என்பதற்கு போலிசார் ஏதேனும் ஆவணம் பெற்றார்களா என்றால் இல்லை. வோடாபோனுக்கு அதிகாரபூர்வ வலைதளம் உள்ளது என்றால் சரிதான். வோடாபோனுடைய அதிகாரபூர்வ

வலைதளத்தில் நோடல் ஆபிசரின் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. நான் வோடபோன் உடைய நோடல் ஆபிசர் இல்லை என்பதாலும் ஜோடிக்கப்பட்ட நபர் என்பதாலும் தான் வோடாபோனுக்கு அதிகாரபூர்வ வலைதளத்தில் நோடல் ஆபிசரின் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்காது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ 132, 136 ஆவணங்களில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் manual or automatic ஆக கொடுக்கப்பட்டதா என்றால் automatic ஆக கொடுக்கப்பட்டதாகும். அதசாஆ 132, 136 ஆவணங்களில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் Excel format ல் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் Comma Separate Value (CSV) format ல் கொடுக்கப்பட்டுள்ளது. Comma Separate Value (CSV) என்பது formated Excel sheet என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. CSV format ஐ Glazr Docx File Editor Pro, CSV File Viewer - Smart CSV, XLSX Editor, Andro XLS Editor, Json Genie Editor, HEX Editor, SQ Lite Editor Master கொண்டு edit செய்ய முடியும் என்றால் சரியல்ல. CDR பற்றி அடிப்படைய அறிவு இல்லாததால் தான் CSV format ஐ Glazr Docx File Editor Pro, CSV File Viewer - Smart CSV, XLSX Editor, Andro XLS Editor, Json Genie Editor, HEX Editor, SQ Lite Editor Master கொண்டு edit செய்ய முடியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. CDR ல் ஐந்து வகை உள்ளது. IPDR stands for Internet Protocol Data Records. SDR stands for Subscribe Data Records. IPDR க்கும் SDR என்ன

வித்தியாசம் என்றால் SDR என்பது வாடிக்கையாளர்களின் பெயர் மற்றும் முகவரி குறித்த தகவல்களை உள்ளடக்கியது. IPDR என்பது வாடிக்கையாளரின் இணையதள உபயோகத்தைப் பற்றி கூறுவது. அதசா 132, 136 ஆகிய இரண்டு ஆவணங்களும் IPDR or SDR ஐ சேர்ந்ததா என்றால் இரண்டு வகையும் இல்லை, CDR தான். Tower Dump ல் பதிவாகும் விவரங்களை சேமிப்பதற்கு மிகப்பெரும் கொள்ளளவு கொண்ட சர்வர்கள் தேவை என்றால் சரிதான். இந்த சர்வர்கள் கணிணியிலிருந்து மாறுபட்டது என்றால் சரியல்ல. வோடோபோனுக்கு எத்தனை வாடிக்கையாளர்கள் அதசாஆ 132, 136 கொடுத்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. சர்வரும் கணிணியும் ஒருங்கிணைக்கப்பட்டதாகும். சர்வருக்கு there is no passkey and there is only password. Passkey has four digits and password has Alpha Numeric Characters. அதசாஆ 132, 136ல் Alpha Numeric Characters தொடர்பாக எந்த குறிப்பும் இல்லை என்றால் இருக்க முடியாது. Is it correct to state that Server password or passkey shall be maintained by technical experts team yes correct. சர்வரில் என்ன input அளிக்கிறீர்களோ அதன்படி தான் தரவுகள் பெறப்படும் என்றால் சரிதான். அதசாஆ 132ல் 1.6.2016 முதல் 22.12.2016 வரையிலான தரவுகள் கேட்கப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் சரிதான். அதசா ஆ 132ல் உள்ள தரவுகள் 1.1.2016 முதல் ஆரம்பமாகியுள்ளது என்றால் சரிதான். 1.1.2016 முதல் 31.5.2016 உள்ள தரவுகள் யாரால் கொடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால்

தெரியாது. அதசாஆ 132ல் report run date எப்போது முடிவடைந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. report run date முடிவடைந்த நேரம் 22.12.2016 அன்று 13:24:20 மணியாகும். report run date ஆரம்பித்த நேரம் 13:24:25 மணி என்று அதசாஆ 132ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதசாஆ132 column4ல் நாள், மாதம், வருடம் (DD/MM/YY)format ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ 132ல் பக்கம் 3ல் மாதம், நாள், வருடம் MM/DD/YY format ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதசாஆ 132 பக்கம் 8ல் மேலிருந்து 13வதாக உள்ள தரவுகளில் மாதம், நாள், வருடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. அதசாஆ 132 பக்கம் 8ல் கடைசி தரவுகள் நாள் மாதம் வருடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ 132 ல் உள்ள தரவுகளில் மாதம் நாள் வருடம் என்றும் நாள் மாதம் வருடம் என்றும் மாறி உள்ளது தெரிந்தே வேண்டுமென்றே மாறவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதசா அ 132 மற்றும் அதசா ஆ 136 ஆகிய இரண்டு ஆவணங்களும் manual ஆக தயார் செய்யப்பட்டுள்ளதால் தான் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதசா ஆ 132 மற்றும் அதசா ஆ 136 ஆகிய இரண்டு ஆவணங்களிலும் latitude and longitude விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அதற்கு பதில் TOWER/CELL ID கொடுக்கப்பட்டுள்ளது. TOWER/CELL ID என்பதில் MCC-MNC-CELL ID consists of Location area code - CELL ID. அதசா ஆ 132 மற்றும் அதசா ஆ 136

ஆகிய இரண்டு ஆவணங்களில் decimal degree இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. decimal degree என்பது பற்றி தெரியாத நான் CDR கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அதசா ஆ 132 மற்றும் அதசா ஆ 136 ஆகிய இரண்டு ஆவணங்களில் உள்ள விவரங்களை கேட்ட போது வழக்கின் வரலாறு பற்றி என்னிடம் தெரிவித்தார்களா என்றால் தெரிவிக்கவில்லை. அதசா ஆ 132 மற்றும் அதசா ஆ 136 ஆகிய இரண்டு ஆவணங்களிலும் போலிசாரின் வேண்டுகோள் கடிதம் இல்லை என்றால் சரிதான். அதசாஆ 135 எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். அதசாஆ135ல் Hash Value குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதசா ஆ 135ல் computer model, serial number , manufacturing detail ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதசா ஆ 135ல் பத்தி 2ல் 'during the said period' என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது எந்த காலகட்டம் என்று குறிப்பாக இல்லை என்றால் சரிதான் அதசா ஆ 135ல் பத்தி 3ல் 'throughout the material part of the said period' என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது எந்த காலகட்டம் என்று குறிப்பாக இல்லை என்றால் சரிதான். அதசாஆ 139 எந்த தேதியில் தயார் செய்யப்பட்டது என்ற விவரம் இல்லை என்றால் சரிதான். அதசாஆ139ல் Hash Value குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதசா ஆ 139ல் computer model, serial number , manufacturing detail ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதசா ஆ 139ல் பத்தி 2ல் 'during the said

period' என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது எந்த காலகட்டம் என்று குறிப்பாக இல்லை என்றால் சரிதான் அதசா ஆ 139ல் பத்தி 3ல் 'throughout the material part of the said period' என்று குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அது எந்த காலகட்டம் என்று குறிப்பாக இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ 132 மற்றும் 136ல் டிஜிடல் கையொப்பம் இல்லை என்றால் சரிதான், என்னுடைய கையொப்பம் உள்ளது. அ.த.சா.ஆ 132 மற்றும் 136 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்பதால் தான் டிஜிடல் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 136ல் பக்கம் 11ல் என் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அ.த.சா.ஆ 132 முதல் 139 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டு காவல் துறையினர் சொல்லிக் கொடுத்ததின் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த ஆவணங்கள் பின்னிட்டு தயார் செய்யப்பட்டதால் தான் தேதி சரியாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. Serverல் இருந்து கிடைக்கக் கூடிய தரவுகள் Raw CDR என்றால் சரிதான். Raw CDR ஐ mapping tool மூலமாகத் தான் Align செய்ய முடியும் என்றால் சரியல்ல, Median tool மூலமாகத் தான் செய்ய இயலும். Purple radiance tool பற்றி எனக்குத் தெரியாது. Avenging security பற்றி எனக்குத் தெரியாது. Third eye techno solution பற்றியும் எனக்குத் தெரியாது. காவல் கண்காணிப்பாளரின் வேண்டுகோள் மூலம் பெறப்படாத அ.த.சா.ஆ 132 மற்றும் 136 CDR சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அ.த.சா.ஆ 132 மற்றும் 136 CDR எந்த தேதியில் முத்திரை செய்யப்பட்டு கையொப்பம்

இடப்பட்டது என்றால் தேதி குறிப்பிடப்படவில்லை. அ.த.சா.ஆ 132 முதல் 139 வரையிலான ஆவணங்கள் போலீசாரால் எப்போது பெறப்பட்டது என்று எனக்குத் தெரியாது. அ.த.சா.ஆ 135 மற்றும் 139 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும், என்னுடைய பொறுப்பில் எந்த கணினியும் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்த நேரம் 1.30 P.M**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

SUBRAMANIAN MALARVIZHI

Digitally signed by SUBRAMANIAN MALARVIZHI
Date: 2026.01.27 16:13:08 +0530

District and Sessions Judge.
Special Court under the National Investigation Agency Act, 2008,
Chennai @ Poonamallee.